கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 07.02.2025. அ.வ.எண் . 404/2020 . வா.சா.1 . தட்சிணாமூர்த்தி, த/பெ, கந்தசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வாங்கிய இடம் எனக்கு சொந்தமானது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு ஏதேனும் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் என்றால் சரிதான். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு எங்கு குடியிருந்து வந்தேன் என்றால் ஆனைமலை தெற்கு தெருவில் குடியிருந்தேன். சங்கர் நகர் என்பது அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவுகளா என்றால் பேரூராட்சியின் அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவுகள் ஆகும். என்னுடைய வழக்கில் சங்கர் நகர் மனைப்பிரிவிற்கான அங்கீகார உரிமை எண் என்னுடைய பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டு உள்ளது. தாவா கிரயப் பத்திரத்தில் மேற்கண்ட சங்கதிகளை குறிப்பிட்டு பதிவு செய்யப்படவில்லை என்றும் தற்போதும் 2 ம் பிரதிவாதிக்கும் 2 ம் பிரதிவாதி குடும்பத்தினருக்கும் சேரக்கூடியது என்றால் சரியல்ல.

2) நான் யாரிடம் இருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் தமிழ்செல்வி, சரோஜினி, ராமாத்தாளிடம் இருந்து கிரயம் பெற்றேன். மனை எண். 36, 37 யை கிருஷ்ணவேணியும், ராஜாமணியும் யாரிடமிருந்து கிரயம் பெற்றார்கள் என்றால் தமிழ்செல்வி, சரோஜினி, ராமாத்தாளிடம் இருந்து கிரயம் பெற்றார்கள். தமிழ்செல்வி, சரோஜினி, ராமாத்தாள்

ஒப்பம்/-(R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

ஆகியோர்களுக்கு சொந்தமானது என்பதை நான் தெரிந்து கொண்டு கிரயம் பெற்றேனா என்றால் ஆமாம். நான் வீடு கட்டுவதற்கு முன்பே 1999 ம் ஆண்டே இறந்து போன 1 ம் பிரதிவாதி அவரது குடும்பத்தார் வீடு கட்ட கூடாது என்று என்னிடம் தகராறு செய்தார்கள் என்றால் சரிதான்.

3) மனை எண். 34 எந்த காலையில் அமைந்துள்ளது என்றால் 935/ஏ 2 ல் அமைந்துள்ளது. வா சா ஆ 9 ல் க.ச. எண். 935/ ஏ என்றுதான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் 935/ஏ 2 என்று நான் வாங்கிவிட்டேன். வா சா ஆ 14 ல் முன் பாத்தியஸ்தர்களான தமிழ்செல்வி , ராமாத்தாள், சரோஜினி பெயர் உள்ளதா என்றால் இல்லை, வேறொரு பட்டாவில் அவர்கள் பெயர் உள்ளது. அதற்குபின்னிட்டு நான் 935/ஏ 2 என்று வாங்கிவிட்டேன். 935/ஏ 2 என்பது இறந்து போன 1 ம் பிரதிவாதிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 935 காலை எண். உட்பிரிவான விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) 935 காலை எண்ணில் உட்பிரிவு 18.10.2006 ல் 935/ஏ 1 தமிழ்செல்வி , ராமாத்தாள், சரோஜினி ஆகியோர்களுக்கும் 935/ ஏ 2 இறந்து போன 1 ம் பிரதிவாதிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பாத்தியப்பட்டது என்றால் அது தவறு. 1 ம் பிரதிவாதி பாலசுப்பிரமணி என்பவர் தமிழ்செல்வி , ராமாத்தாள், சரோஜினி ஆகியோர்களுக்கு 935/ஏ , 939/ஏ காலைகளில் சேர்த்து மொத்தம் 4 ஏக்கர் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி தமிழ்செல்வி ,

ஒப்பம்/-(R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

ராமாத்தாள், சரோஜினி ஆகியோர்கள் சேர்ந்து சங்கர் நகர் என்று மனைப்பிரிவு போட்டதில் 34 ம் எண் மனையை நான் கிரயம் பெற்றேன்.

5) 1 ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் எழுதிவைத்ததை ரத்து செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் நீதிமன்றத்தின் மூலம் தெரியும். தமிழ்செல்வி , ராமாத்தாள், சரோஜினி ஆகியோர்கள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் செட்டில்மெண்ட் ரத்து செய்தது செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தமிழ்செல்வி , ராமாத்தாள், சரோஜினி ஆகியோர்களுக்கு செட்டில்மெண்ட் ரத்து செய்த விவரம் நன்குதெரியும் என்றும் தெரிந்து கொண்டே 1ம் பிரதிவாதியை ஏமாற்றுவதற்காக மேற்படி நபர்கள் உங்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

6) பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ,வ.எண். 191/2011 வழக்கு இதே பிரதிவாதிகளின் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவாவில் அந்த விவரத்தினை குறிப்பிட்டுள்ளேனா என்றால் அந்த வழக்கில் உத்தரவு பெற்றுவிட்டதால் நான் இதில் குறிப்பிடவில்லை, பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் நான் குடியிருக்கும் தொந்தரவு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தேன். அவ்வாறு நான் கூறுவது பொய் என்றும் விளம்புகை பரிகாரம் கேட்டு தான் அந்த தாவாவை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் கூறியுள்ள சொத்து விவரமும் தாவாசொத்து விவரமும் ஒன்று என்றால் சரிதான். பொள்ளாச்சி சார்பு

ஒப்பம்/-(R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

நீதிமன்றத்தில் அ. வ. எண். 191/2011 தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து வழக்கிடை சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அறிக்கை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தாவா சொத்தும் மேற்கண்ட வழக்கிடை சொத்தும் நான் குறிப்பிட்டுள்ள கிரயப்பத்திரங்களின் படி இல்லை என்பதை தெரிந்துகொண்டு அந்த வழக்கை மேற்கொண்டு நடத்தாமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.